# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2055 • ஏப்ரல் 06, 2024

Weekly E-paper • April 06, 2024


## காணாமல் போன 6 நதிகளும் 11 ஊர்களும்!

சுப. வீரபாண்டியன்




## ‘இந்தியா’ மகுடம் சூடும்!

தலையங்கம்

## அழிவின் எல்லையில் சர்வாதிகாரம்!

காசு. நாகராசன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● ஏப்ரல் 06, 2024 Weekly E-paper ● April 06, 2024


## காணாமல் போன 6 நதிகளும் 11 ஊர்களும்!

**சுப. வீரபாண்டியன்**

ஆங்கில நாளேடு ஒன்றில் பேராசிரியர் ஆ. இரா. வேங்கடாசலபதி, தமிழ்நாடு அரசியல் குறித்தும், நாடாளுமன்றத் தேர்தல் நிலவரம் குறித்தும் ஒரு கட்டுரை எழுதி இருக்கிறார். அதில் தமிழ்நாட்டில் அதிமுகவுக்கும், பாஜகவுக்கும் இடையில் கடும் போட்டி என்று குறிப்பிட்டுள்ளார்.

இதனைப் படித்தவுடன் ஓர் அதிர்ச்சி ஏற்பட்டது. கடைசி வரியைப் படித்த பிறகே நமக்கு ஒரு தெளிவு கிடைத்தது. இரண்டாவது இடத்திற்கு யார் வருவது என்பது குறித்தே அந்தப் போட்டி நடந்து வருவதாக அவர் குறித்துள்ளார்.


தலைவர் கலைஞர் இறந்த பிறகு நடைபெற்ற 2019 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில், திமுக மிகப் பெரும் வெற்றி பெற்றது. இப்போது திமுக கூட்டணியின் நிலை, இரண்டு வகைகளில் மேலும் வலுவடைந்து உள்ளது என்பது அவர் கருத்து.

அன்றைய கூட்டணி அப்படியே இன்றும் தொடர்கிறது என்பதோடு, கமல்ஹாசனின் மக்கள் நீதி மையத்தின் ஆதரவும் இப்போது கூடி உள்ளது. இன்னொரு பக்கம், எதிர்க்கட்சிகள் பிரிந்தும், சிதைந்தும் கிடக்கின்றன என்னும் அவர் பார்வை மிகச் சரியானது.

திமுக கூட்டணியை, அதிமுக அணி, பாஜக அணி மற்றும் மைக் சின்னத்தில் போட்டியிடும் சுயேச்சைகளைப் போன்றவர்கள் எதிர்க்கின்றனர். எதிர்ப்பு அணிகள் மூன்றாகப் பிரிந்து , திமுகவின் வெற்றியை மிக எளிதாக ஆக்கி இருக்கிறது என்பது உண்மை! நன்றாக இருந்த அதிமுக இப்போது நாலாக உடைந்திருக்கிறது. அல்லது பாஜகவால் திட்டமிட்டு உடைக்கப்பட்டு இருக்கிறது. இலை பழுத்து பலாப்பழம் தனியாக வந்துவிட்டது!

இந்த உண்மை நிலை, அரசியல் விமர்சகர்களுக்கும், கல்வியாளர்களுக்குமே புரியும் போது, பாஜகவிற்குப் புரியாதா என்ன?

அதனால் தான் கச்சத்தீவு கதை இப்போது கட்டவிழ்த்து விடப்படுகிறது. ஆனால் அது கெட்டிக்காரன் புழுகாகக் கூட இல்லாமல், பட்டென்று உடனேயே உடைந்து போய்விட்டது.




அதனைத் தாண்டி, கச்சத்தீவு இருக்கட்டும் அருணாச்சலப் பிரதேசத்தை முழுமையாக இந்தியா எப்போது மீட்கப் போகிறது என்னும் கேள்வியும் எழுந்துள்ளது. அருணாச்சலப் பிரதேசத்தில் ஆறு நதிகளுக்கும், 11 ஊர்களுக்கும் சீன அரசு, சீன மொழியில் பெயர் வைத்துள்ளது. இதுகுறித்து நம் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் சொல்லி உள்ள விளக்கம், இதுவரை உலகம் கேள்விப்பட்டிராத ஒன்றாக இருக்கிறது!

அவர் சொல்கிறார் - அந்த நதிகளும், நகரங்களும் நம்மிடம்தான் உள்ளன. அவற்றிற்கு அவர்கள் மொழியில் பெயர் வைத்துக் கொள்வதால் என்ன ஆகிவிடப் போகிறது என்கிறார்.

"மாப்பிள்ளை இவர்தான், ஆனால் சட்டை இவருடையது இல்லை" என்பது போல, நம் தேசத்தின் நதிகளையும் நகரங்களையும் இழப்பது அவ்வளவு எளிதாகப் போய்விட்டது!

இந்தத் தேர்தலிலும், தப்பித்தவறி பாஜக மறுபடியும் வெற்றி பெற்று விட்டால், நதிகளுக்கும் நகரங்களுக்கும் மட்டுமில்லை, இந்திய நாட்டிற்கும் அவர்கள் பெயர் வைத்து விடுவார்கள். ஆட்சி இவர்கள் கைகளில் இருக்கும் - நாடு அவர்கள் கைகளுக்குப் போய்விடும்!

வாக்காளர்களே கவனம்! ●

வாக்களியுங்கள் திமுக கூட்டணிக்கு










"ஸ்தோத்ரம் ஆண்டவரே...
எங்க சொல்லுங்க...."

"தோத்ருவோம் ஆண்டவரே"









தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## ‘இந்தியா’ மகுடம் சூடும்!

திருவாசகத்திற்கு உருகாதவர் ஒரு வாசகத்திற்கும் உருகமாட்டார் என்று சொல்லக் கேட்டதுண்டு.

கம்பராமாயணத்தை எழுதியவர் சேக்கிழார்தான் என்று தன் ஆராய்ச்சியின் மூலம் கண்டுபிடித்துச் சொன்ன நம்முடைய திருவாசகத் தம்பிரான் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் இப்போது புதிதாக ஒன்றைக் கண்டுபிடித்து இருக்கிறார்.

நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்து கொண்டு பா.ஜ.கவை எப்படி எதிர்ப்பது? - இதுதான் அந்த புதிய கண்டுபிடிப்பு.

அப்படியானால் தி.மு.கவும், அ,தி. மு.கவுக்கு எதிர்கட்சி தானே!

இதை மாங்குமாங்கு என்று எதிர்த்துப் பேசும் எடப்பாடியார், இதே கைவரிசையை பா.ஜ.கவிடமும் காட்டவேண்டாமா?

அதுதான் முடியாது, ஏன்? அதை அடிமைச் சேவகம் என்று சொன்னாலும், ‘ராஜவிசுவாசம்’ அல்லது ‘ராஜதந்திரம்’ என்றும் சொல்லலாம்.

அந்த இரட்டை இலையின் கீழ் இருந்தவர்களைக் கொஞ்சம் பாருங்கள்.

“இப்போது அம்மா இல்லை, அந்த இடத்தில் மோடி இருக்கிறார்”, இது டி.டி.வி. தினகரனின் உருக்கமான பேச்சு.

“எங்களை கூட்டணியில் சேர்க்காவிட்டாலும் நாங்கள் மோடியுடன்தான் இருப்போம்” என்று சொல்லும் தைரியத்தை ஒற்றை ஆளாக இருக்கும் ஓ.பன்னீர் செல்வத்திடம் பார்க்கிறோம். இது வெளிப்படையாகத் தெரிகிறது.

ஆனால் எடப்பாடி அப்படியில்லை. கடந்த 10 ஆண்டுகளாக ஆட்சி செய்யத் தெரியாமல் மக்களிடம் கெட்ட பெயர் வாங்கியிருக்கும் பா.ஜ.கவின் கள்ளக் கூட்டாளி அவர்.

பா.ஜ.கவின் மோடி அரசு கொண்டுவந்த நீட் தேர்வு, சி.ஏ.ஏ போன்ற மக்கள் விரோத சட்டங்கள் நிறைவேற வாக்களித்து விட்டு, பொதுத்தேர்தல் வந்தவுடன் பா.ஜ.கவை எதிர்க்கிறாராம்.

வேறொன்றும் இல்லை. நான் அடிப்பதுபோல அடிப்பேன். நீ அழுவது போல அழு. தேர்தல் முடிந்தவுடன் நாம் கூடி கும்மியடிக்கலாம் என்ற எஜமானிய விசுவாசம் தான் அது.

தலைவர் ஸ்டாலின் மீது பாயும் எடப்பாடி, மோடியிடம் பம்முகிறார். எல்லாம் பயம்தான்.

மொத்தத்தில் அவர்களிடம் அம்மா இல்லை, மோடி இருக்கிறார்.

‘காவி’ கள்ளக் கூட்டணி, கரை சேராது.

‘இந்தியா’ நல்ல கூட்டணி, மகுடம் சூடும்.




ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
ஆசிரியர் குழு:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை
இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

# அழிவின் எல்லையில் சர்வாதிகாரம்!

காசு. நாகராசன்

நேற்றுவரை டில்லியோடு சண்டை போட்டுக் கொண்டிருந்த பெரியாரிய, அம்பேத்கரிய, மார்க்சியம் உள்ளிட்ட

அனைத்து முற்போக்கு இயக்கங்களும், தலைவர்களும் இன்றைக்கு அப்படியே தங்கள் நிலைபாட்டை மாற்றிக் கொண்டு,

இந்திய அரசமைப்புச் சட்டத்தை, இந்திய ஜனநாயகத்தைக்காப்பாற்ற 'இந்தியா கூட்டணி' என்று ஓரணியில் திரண்டு நிற்கிறார்கள்.

2014 ஆம் ஆண்டில் வளர்ச்சி என்கிற முழக்கத்தோடும், 2019 ஆம் ஆண்டில் பாதுகாப்பு என்கிற முழக்கத்தோடும் வடநாட்டு மக்களை ஏமாற்றி அரியணை ஏறிய மோடிக்கு இப்போது அந்த இரண்டு முகமூடிகளும் கிழித்து எறியப்பட்டுவிட்ட நிலையில் , 2024 தேர்தலை எதிர்கொள்ள வழி தெரியாமல் போய்விட்டது.




இந்த இக்கட்டான சூழலில் தான் ஜனநாயக வழிமுறைகளை மீறி, ஏதேச்சதிகாரத்தால் எதிர்க்கட்சிகளை சட்டத்தின் துணையோடும், அதிகாரத்தின் வலிமை கொண்டும் ஒடுக்கி, அழித்து விட்டு,

ஆர் எஸ் எஸ் இன் 'சர்வாதிகாரப் பாசிச ஒற்றை ஆட்சி ' எனும் திட்டத்திற்கு மகுடம் சூட்டத் துணிந்திருக்கிறார்கள் மோடி வகையறாக்கள்.

ஈடி, அய்ட்டி, சிபிஐ, என்ஐஏ போன்ற விசாரணை அமைப்புகளை முடுக்கிவிட்டு எதிர்க்கட்சிகளை எல்லாம் விசாரணை வளையத்திற்குள்ளும், சிறைக் கொட்டடியிலும் அடைத்து விட்டு ஆளில்லா பந்தயக் களத்தில் ஆடி முடிசூட முயற்சிக்கிறார் மோடியானவர்.

தமிழ்நாட்டில் குறிப்பாக கொங்கு மண்டலத்தில் 'ஒரு பர்சன்ட் கட்சி ' என்கிற அளவிற்கு பாஜகவை அடித்து வீழ்த்தியவர் தமிழ்நாடு அரசின் மின்சாரத் துறை அமைச்சராக இருந்த திரு.செந்தில் பாலாஜி.

தலைநகர் டெல்லியில் இருந்து பஞ்சாப் அரியானா மாநிலங்களைத் தாண்டி குஜராத் வரை பாஜகவின் ஊழல், வன்முறை, மதவெறி அரசியலை நேருக்கு நேராக எதிர்கொண்டு மக்களிடமிருந்து பாஜக கும்பலை அந்நியப்படுத்தியவர் அரவிந்த் கெஜ்ரிவால்.

ஜார்கண்ட் மாநிலத்தில் பட்டியல் பழங்குடிச் சமூகத்திற்கு மட்டுமல்ல, ஓபிசி மக்களுக்கும் கூட பாஜக விரோதி தான் எனச் சொல்லி சிறுபான்மையினர் மற்றும் ஓபிசி - பட்டியல்- பழங்குடியின சமூக கூட்டமைப்பையே பாஜகவிற்கு எதிர் திசையில் நிறுத்தியவர் ஹேமந்த் சோரன் .

அரசியல் சாசன சட்ட எல்லைகளுக்கு அப்பால் ஜனநாயகத்தையே கேலிக்கூத்தாக்கும் ஏதேச்சதிகாரத்தின் உச்சத்திற்கே சென்று, இரண்டு மாநில முதலமைச்சர்களையும், தமிழ்நாட்டின் அமைச்சரையும் சிறைப்படுத்தி இருக்கிறார் நரேந்திர மோடி.

திமுக , காங்கிரஸ், ஆம் ஆத்மி உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் ஓரணியில் நின்று , கூட்டணி அமைத்து ஜனநாயக வழியில் தேர்தலை எதிர்கொள்ளக் களம் காண்கிறார்கள். ஆனால் , ஒட்டுமொத்த இந்திய மக்களுக்கு விரோதமாக, இரண்டு பெரும் கார்ப்பரேட்டு களுக்காகவும், ஆர்எஸ்எஸ் என்கிற ஒரு சமூக விரோத ஆரிய கூட்டத்தின் அதிகார மையத்திற்காகவும், தமது பத்தாண்டு கால ஆட்சியை 'காணிக்கை' யாக்கிய நரேந்திர மோடியால், 2024 தேர்தலில் ஜனநாயக வழியில்

மக்களைச் சந்திக்க முடியவில்லை. எனவே, சர்வாதிகாரத்தின் துணையோடு எதிர்க்கட்சிகளை பந்தயக் களத்திற்கு வெளியே தள்ளிவிட்டு ஊடகம், அரசு எந்திரம், தேர்தல் ஆணையம், நீதி பரிபாலனங்கள் என ஒட்டு மொத்த நிர்வாக அமைப்புகளையும் மிரட்டியோ , விலை பேசியோ வளைத்துக் கொண்டு, இப்போது ஒழுக்கசீலர் என்கிற முகமூடியோடு தேர்தல் களத்தில் எட்டிப் பார்க்கிறார் மோடி.

இறந்து போனவர்களுக்கு வைத்தியம் பார்த்து ஆயுஷ்மான் காப்பீட்டுப் பணத்தைச் சுருட்டிய மோடி ஈடி, அய்ட்டி சோதனைகளில் கோடிகளைச் சுருட்டிக்கொண்ட மோடி,

காண்ட்ராக்டர்களுக்குத் தேர்தல் பத்திரங்களில் பேரம் பேசிய மோடி இன்றைக்கு ஒழுக்கசீலர் என்கிற பொருந்தாத முகமூடியை அணிந்து கொண்டு மீண்டும் அரசாட்சியைப் பிடிக்க முயற்சிக்கிறார்.

அரசியல் என்பது சமூகத்திற்கானது. ஜனநாயகம் அரசியலுக்கானது. சர்வாதிகாரம் அல்லது எதேச்சதிகாரம் என்பது அரசியல் அழிவின் எல்லைக்கோடு என்பதை உணர்ந்திருக்கிற இந்திய மக்கள், குறிப்பாகத் தென்னிந்திய மக்கள், இன்னும் குறிப்பாகத் தமிழ்நாட்டு மக்கள் 2024 இல் மோடிக்கு விடை கொடுக்கத் தயாராகி விட்டார்கள்.

எப்போதும் ஹிட்லர்களின் முடிவுகளை ஸ்டாலின்களே எழுதுவார்கள் என்கிற கடந்த நூற்றாண்டின் வரலாறு இந்த நூற்றாண்டிலும் தொடர்கிறது. அது இந்தியாவிலிருந்து தொடங்குகிறது. குறிப்பாகத், தெற்கிலே இருந்து தொடங்குகிறது.

வீழ்த்துவோம் மோடியின் பாசிச சர்வாதிகாரத்தை.

வாக்களிப்போம் தி.மு.கழகத் தலைமையிலான 'இந்தியா கூட்டணி'க்கு!

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian